**செய்தி வெளியீடு எண்: 335** **நாள்: 18.05.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (18.5.2018) நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் நடைபெற்ற 122—வது உதகை மலர்க்காட்சி தொடக்க விழா மற்றும் குந்தா நீரேற்று புனல் மின் திட்டப்பணிகள் துவக்க விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஊட்டி தாவரவியல் பூங்கா பகுதியில் எழுச்சியோடு, சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற 122வது உதகை மலர்க் கண்காட்சி துவக்க விழா மற்றும் குந்தா நீரேற்று புனல் மின் திட்டப் பணிகளுக்கு துவக்க விழா, மற்றும் அரசின் சார்பாக கட்டி முடிக்கப்பட்ட பணிகளுக்கான திறப்பு விழா, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கி தலைமையுரை ஆற்றிய **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி. இன்னசென்ட் திவ்யா அவர்களே!**

காலத்தின் நேரம் கருதி, திட்ட விளக்க உரை ஆற்ற முடியாமல் அமர்ந்திருக்கின்ற வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் **திரு. ககன்தீப்சிங் பேடி அவர்களே!**

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று, சிறந்த கருத்துக்களை எடுத்து வைத்து அமர்ந்திருக்கின்ற **மாண்புமிகு நகராட்சி, நிர்வாகம், ஊரகவளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!**

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று, சிறந்த கருத்துக்களை எடுத்து வைத்து அமர்ந்திருக்கின்ற **மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே!**

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, **மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய செல்லூர் ராஜு அவர்களே!**

**மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர். சரோஜா அவர்களே!**

மாநிலங்களவை உறுப்பினர் திரு. கே.ஆர்.அர்ஜுனன் அவர்களே!

நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.கோபாலகிருஷ்ணன் அவர்களே!

குன்னூர் சட்டப்பேரவை உறுப்பினர்

திரு. சாந்தி அ.ராமு அவர்களே!

உதகமண்டலம் சட்டப்பேரவை உறுப்பினர்

திரு.ஆர்.கணேஷ் அவர்களே!

மாநிலங்களவை உறுப்பினர்

திரு.ஏ.கே.செல்வராஜ் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர்

திரு.சுந்தரம் அவர்களே!

மாநிலங்களவை உறுப்பினர்

திரு.விஜயகுமார் அவர்களே!

சட்டப்பேரவை உறுப்பினர்

திரு.சின்ராஜ் அவர்களே!

திரு.ஈஸ்வரன் அவர்களே!

முன்னாள் அமைச்சர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையத் தலைவர்

திரு. அ.மில்லர் அவர்களே!

எரிசக்தித் துறையின் முதன்மைச் செயலாளர்

திரு.விக்ரம் கபூர் அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் அமைச்சர் திரு.புத்திசந்திரன் அவர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே!

கூட்டுறவு சங்க நிர்வாகிகளே!

சுற்றுலா பயணிகளே!

அரசு அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண்

எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை அன்னை ஈன்றெடுத்த

அற்புதங்கள் ஏராளம்.

உலகின் ஒட்டுமொத்த அழகும், அற்புதங்களும்

இந்த உதகையில் அணிவகுத்து நிற்பது
கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

சிகரங்கள், பள்ளத்தாக்குகள், மலைமுகடுகள், நீர்த்தேக்கங்கள், நீர் வீழ்ச்சிகள்,
மலர்த் தோட்டங்கள், சிற்றோடைகள், பூங்காக்கள், படகு இல்லம்,
நீர் மின் நிலையங்கள் என்று கண்களையும்,
மனதையும் இந்த உதகமண்டலம் குளிர வைக்கின்றது.
இன்றளவும் இங்கு வாழ்ந்து வரும் இருளர், குறும்பர், பணியர், தோடர், கோத்தர்,
காட்டு நாயக்கர் போன்ற பழங்குடியினராலும், படுகர் இன மலைவாழ் மக்களாலும்
இப்பகுதியின் பழமையும், பண்பாடும் காக்கப்பட்டு வருகின்றன.

இரவு நேரங்களில் வெள்ளி நிலா விளையாடும்
எழில் மலையாக உதகை மலை காட்சியளிப்பதால்
11 ஆம் நூற்றாண்டு காலக்கட்டத்தில்
ராஜாக்கள் இந்த மலையை ‘‘நிலா மலை’’ என அழைத்ததாகக் கூறப்படுகிறது.

‘கிரி’ என்றால் ‘மலை’ என்னும் பொருளில்
பிற்காலத்தில் “நீலகிரி” என
பெயர் மாறியதாகவும் கூறப்படுகின்றது.
சிலப்பதிகார காப்பியத்தில் “நீலகிரி” பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

நீலகிரி இந்தியாவின் முதல் உயிர்க்கோள் காப்பகம் என்பது நமக்கெல்லாம்
பெருமையாக இருக்கின்றது.

இந்த 122வது மலர்க்காட்சியிலே பல்வேறு சிறப்பு மிக்க மலர்களால் அலங்கரிக்கப்பட்ட, காட்சிப்படுத்தப்பட்ட, மனதிற்கினிய சம்பவங்களை நாம் பார்த்தோம். 10,000 சர்பரா மற்றும் ரோஜா மலர்களால் அலங்கரிக்கப்பட்ட 9 அலங்கார வளைவுகள், ஆர்கிட் மலர்களால் ஆன பட்டாம்பூச்சியின் உருவ அமைப்பில் அமைந்த நுழைவு வாயில், 1500 ஆர்கிட்ஸ் மற்றும் 1000 கார்னேஷன்

மலர்களைக்கொண்டு உருவாக்கப்பட்ட கார்டூன் பொம்மை, 1 லட்சம் கார்னேஷன் மலர்களைக் கொண்டு தத்ரூபமாக உருவாக்கப்பட்ட மேட்டூர் அணை, 800 கார்னேஷன் மலர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட மிக்கிமவுஸ் உருவம் ஆகிய அனைத்தும் உங்கள் அனைவரையும் கவரும்வண்ணம் அமைக்கப்பட்டுள்ள அற்புதமான ஒரு காட்சியை நமக்கு தந்திருக்கின்றார்கள். இது காண்போர் மனதை மகிழ்ச்சியூட்டுவது மட்டுமல்ல, அருமையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை வடிவமைத்த வேளாண் துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு இந்த நேரத்திலே பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனென்றால், இயற்கையை ரசிக்காதவர்கள் எவரும் இருக்க முடியாது. ஒரு மனிதனுக்கு மகிழ்ச்சி தேவை அந்த மகிழ்ச்சி எங்கே கிடைக்கும் என்று சொன்னால், இயற்கையில் தான் கிடைக்கும், அந்த இயற்கையான சூழலை இங்கே உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். பார்க்கின்ற இடங்களெல்லாம் மலர்களாக காட்சியளிக்கின்றது, அந்த கண்கவர் மலர்களெல்லாம் இன்றைக்கு மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய இந்த தாவரவியல் பூங்காவிலே நாம் பார்க்க முடிகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஹாலந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட துலிப், டிஸ்பக்ஸ், கேளா லில்லி, போன்ற மலர்களாலும் சிலிகோனிய மலர்கள் உட்பட 25000 பலவண்ண பூந்தொட்டிகள், கண்ணாடி மாளிகையில் உள்ள 5000 பூத்தொட்டிகள் என்று பார்ப்போர் மயங்கும் வண்ணம் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட மலர் கண்காட்சியை நம்முடைய வேளாண் துறையை சார்ந்தவர்கள் அருமையாக அமைத்திருக்கின்றார்கள்.

தேயிலை, காபி, காய்கறிகள், பழங்கள், உணவுப்பயிர்கள் ஆகியவற்றை தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாமல், பிற நாடுகளுக்கும் இந்த நீலகிரி மாவட்டம் வழங்கி வருகின்றது.

நீலகிரி மலையைத்தான் மலைகளுக்கெல்லாம் அரசி
என்று புகழ்வார்கள்.
அத்தகைய மலையரசிக்கு மக்கள் அரசியாகிய
நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களால்
மகுடம் சூட்டி மகிழ்ந்த மாவட்டம் நீலகிரி மாவட்டம் என்பதை பெருமையோடு
சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

4000 க்கும் மேற்பட்ட ரகங்களைக் கொண்ட
ரோஜா தோட்டம், அலங்கார விளக்குகள்,
பாதாள சாக்கடை, கழிப்பறை, நஞ்சநாடு தேயிலை தொழிற்சாலை, அரசு
தோட்டக்கலைப் பண்ணை,
ஊட்டி ஏரி புனரமைப்பு, தொட்டபெட்டாவில் தேயிலைப் பூங்கா, பழங்குடியினர்
பண்பாட்டு மையம் போன்ற பல திட்டங்களால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா
அவர்கள் உதகையின் அழகிற்கு
மேலும் அழகு சேர்த்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தொடர்ந்து, இப்போது
நடைபெறுகின்ற மாண்புமிகு அம்மாவின் அரசும் ஊட்டியை தன் செல்லப்
பிள்ளையாக நினைத்து பாராட்டி, சீராட்டி பல்வேறு திட்டங்களை இந்த மாவட்ட
மக்களுக்கு அளித்து வருகிறது.

எனவேதான், கடந்த 30.12.2017 அன்று
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவின்
போது உதகை நகராட்சிக்கான
27 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், 5 கோடி
ரூபாய் செலவில்

நஞ்ச நாடு, இன்ட்கோ கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை உட்பட
57 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான
258 பணிகளை நான் துவக்கி வைத்தேன்.

அதைப்போல 272 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஆயிரத்து
88 பணிகளுக்கு
அன்றைய தினமே அடிக்கல் நாட்டப்பட்டது.
அன்றைய  விழாவில் 19 ஆயிரத்து 79 பயனாளிகளுக்கு
81 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான
நலத்திட்ட உதவிகளை வழங்கினேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமன்றி, நீலகிரி மாவட்டத்திற்கு
மாண்புமிகு அம்மாவின் அரசு செய்து வரும் பணிகள்
ஏராளம்.  அவற்றில் ஒருசிலவற்றை மட்டும்
இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1. நீலகிரி மாவட்டத்தில் முற்றிலுமாக பிளாஸ்டிக் தடை செய்யப்பட்டு, பிளாஸ்டிக் இல்லாத மாவட்டமாக நீலகிரி மாவட்டம் மாற்றப்பட்டுள்ளது.
2. ‘‘உன்னத உதகை’’ திட்டமானது 3.10.2017 அன்று ஆரம்பிக்கப்பட்டு, மாவட்டம் முழுவதும் தூய்மைப்படுத்தப்பட்டு வருகிறது.
3. உதகை ஏரி சுத்திகரிப்பு நிதியிலிருந்து கோடப்பமந்து கால்வாயினை தூர் வாரி தூய்மைப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
4. தமிழ்நாட்டிலேயே அதிகப்படியான வன உரிமை சட்டத்தின் கீழ் பழங்குடியினருக்கு வன உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது.
5. உச்ச நீதிமன்ற ஆணையின்படி பிரிவு 17 மற்றும் ஜென்மம், பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் தேவர்சோலை பேரூராட்சி மூலம் 30 பணிகள் 2 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஒவேலி

பேரூராட்சி மூலம் 38 பணிகள் 4 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கூடலூர் ஊராட்சி ஒன்றியம் மூலம் 7 பணிகள் ஒரு கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நடைபெற்று வருகின்றன.

6. மேலும், ஜென்மம் நிலங்களில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு ஓவேலி பேரூராட்சி, கூடலூர் நகராட்சி மற்றும் நெலாக்கோட்டை ஊராட்சிகளில் 340 வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இப்பகுதிகளில் 630 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு வீட்டுக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இலவச மின் இணைப்பு பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றது.

7. உதகையில் உள்ள அரசு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, குன்னூரில் உள்ள சிம் பூங்கா மற்றும் பழவியல் நிலையம் ஆகியவை 10 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

8. நடப்பாண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் 100 எக்டேர் பரப்பளவில் 50 லட்சம் ரூபாய் செலவில் ஸ்ட்ராபெரி பயிர் விரிவாக்கத் திட்டமும், ஸ்ட்ராபெரி திசு வளர்ப்பு மூலம் உற்பத்தி செய்ய 20 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. நீலகிரி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, சிறிய வகையிலான வண்ணத்துப் பூச்சி வடிவில் தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் அமைக்க நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் வனத் துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து, ஒவ்வொரு பழங்குடியின குடியிருப்புக்கும் சாலை, குடிநீர், தெருவிளக்கு, வீடுகள், உண்டி உறைவிடப் பள்ளி ஆகிய

அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

11. அனைத்து மக்களும் வனம், வன உயிரினங்கள் மற்றும் இயற்கை வளங்களை பார்த்து மகிழவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், வனத்துறை எடுத்து வரும் நடவடிக்கைகளை அறிந்துக் கொள்ளவும், நீலகிரி மாவட்டத்தில் அவலாஞ்சி, கெய்ரன்ஹீல் மற்றும் லாங்உட்ஷோலா ஆகிய மூன்று இடங்களில் சூழல் சுற்றுலா தலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரங்களை உயிர்பன்மை பாதுகாப்புடன் இணைக்கப்படும்.

12. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தின் பிரதான பயிரான உருளைக்கிழங்கு பயிருக்கு கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 2 கோடி ரூபாய் அளவிற்கு பயிர் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டும் நீலகிரி மாவட்ட விவசாயிகள் அனைவரும் இப்பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து, இயற்கை இடர்பாடுகளில் இருந்த தங்களை காத்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

13. நீலகிரி மாவட்ட சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள சிறு தேயிலை விவசாயிகள் உற்பத்தி செய்யும் பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றிற்கு ரூபாய் 2 வீதம் மானியம் அளிக்க கடந்த 30.12.2017 அன்று நான் வந்தபோது அறிவித்தேன். அந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்த ஆணைகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன, அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நீலகிரியை இயற்கை வளம் கொழிக்கும்
எழில் பூமியாகவும், பொழுதுபோக்கு மலையாகவும்
மட்டும் நாம் கருதிவிட முடியாது.

இன்றைக்கு தமிழ்நாட்டை இருளில்லா மாநிலமாகவும், மின் மிகை மாநிலமாகவும் மாற்றியதில்
இங்குள்ள பைகாரா இறுதிநிலை நீர்மின் நிலையம், மரவகண்டி, மாயார் மற்றும்
குந்தா நீர்மின் நிலையங்களுக்கும் பங்கு இருக்கிறது என்பதை
நான் பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன்.

150 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட
பைகாரா இறுதி நிலை நீர்மின் நிலையம்
1994 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு,
2005 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
திருக்கரங்களால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
ஆசியாவிலேயே அதிக அழுத்தம்
மற்றும் உயரம் கொண்ட
முதல் புனல் மின் உற்பத்தி நிலையம் இதுதான்.

இந்த மின்நிலையம் அமைப்பதற்காக இங்கே
எந்த வனப் பகுதியும் ஆக்கிரமிக்கப்படவில்லை.
இங்கு வன விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படவில்லை என்பதுதான்
இந்த நீர்மின் நிலையத்தின் தனிச்சிறப்பு.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011ல் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு
மின்சாரத் தட்டுப்பாட்டிலும்,

தொடர்ந்து ஏற்பட்ட மின்சாரத் தடைகளாலும்,

தமிழ்நாடு இருளில் மூழ்கியிருந்தது.

தமிழ்நாட்டு மக்கள் ஆகிய நீங்கள் அப்போது

எத்தனை துன்பங்களை அனுபவித்தீர்கள் என்பதை

மறந்திருக்க மாட்டீர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,

மக்களின் துயரத்தை தன் துயரமாகக் கருதி,

அறிவும் ஆற்றலும் மிக்க

மின்பொறியாளர்களை முடுக்கிவிட்டு,

நீண்ட கால மின் திட்டங்களுக்கு தேவைப்படும் பல்வேறு ஒப்புதல்களைப் பெற்று

விரைந்து செயல்பட்டு, தமிழ்நாட்டை ஒளிமயமான மாநிலமாக மாற்றினார்கள்.

அதன் விளைவுதான் இன்று வரை

தமிழ்நாடு மின் மிகை மாநிலமாகத்

தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த தொழில் வளர்ச்சிக்காகவும்,

தமிழ்நாட்டு இல்லங்களை தொடர்ந்து மிளிரச் செய்யவும், தொடர்ந்து தமிழ்நாட்டை

மின்மிகை மாநிலமாக

தக்க வைத்துக் கொள்ளுதல் போன்ற உயரிய நோக்கத்திற்காக

மின் உற்பத்தியை பெருக்குதல்,

மின்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்,

மின் தொடரமைப்புகளை நிறுவுதல்,

மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை விரிவாக்குதல் போன்ற பணிகளை

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும்

இந்த அரசு முனைப்புடன் செய்து வருகிறது.

அந்த வகையில்,

எரிசக்தித் துறையின் சார்பில்,

நீலகிரி மாவட்டம், நஞ்சநாடு கிராமம், காட்டுகுப்பை பகுதியில் ஆயிரத்து 850

கோடி ரூபாய் மதிப்பீட்டில்

4X125 மெகாவாட் குந்தா நீரேற்று புனல்மின் திட்டத்திற்கான பணிகளை

இன்று நான் துவக்கி வைப்பதில்

மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

2021–2022ஆம் ஆண்டில் நிறைவு பெறவுள்ள இத்திட்டம், நாளொன்றுக்கு 3

மில்லியன் யூனிட் மின்சாரம்

உற்பத்தி செய்யும் திறன் உடையது.

அதனால் ஆண்டுக்கு சுமார்

ஆயிரத்து 95 மில்லியன் யூனிட் மின்சாரம் தமிழ்நாட்டிற்கு கூடுதலாகக்

கிடைக்கும்

என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பொதுப்பணித் துறை சார்பில் கட்டப்படவுள்ள

5 கட்டடங்கள் மொத்தம் 10 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 திட்டப்

பணிகளுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

அதைப்போல தோட்டக்கலைத் துறை சார்பில்

தாவரவியல் பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி குடில், மாவட்ட

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலகம் உள்ளிட்ட

3 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான

6 கட்டடங்களை இன்று நான் திறந்து வைத்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இனிய விழாவில்,

நான் மக்களுக்கு அன்பாக கூறிக்கொள்வது;

சமூக அக்கறையோடு மின்சாரத்தை
சிக்கனமாக செலவு செய்யுங்கள்.

நாம் சேமிக்கும் ஒவ்வொரு யூனிட் மின்சாரமும்,
தமிழ்நாடு மட்டுமல்லாமல், நம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் முக்கியம் என்பதை
நாம் அனைவரும் உணர வேண்டும்.

உதகையில் 122 வது மலர்க்காட்சி
இன்று முதல் வருகின்ற 22 ஆம் தேதிவரை
நடைபெற உள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும்
இந்த மலர்க்காட்சியை 2 லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் கண்டு மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இந்த வருடம் 35 ஆயிரம் தொட்டிகளில்
மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு,
அவை பல்வேறு வடிவங்களில் சுற்றுலா பயணிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
பல வண்ண மலர்கள் மற்றும்
இந்த மாவட்டத்தில் உற்பத்தியாகும் லில்லியம் மலர்களின் தொகுப்பு இந்த மலர்க்காட்சியில்
முக்கிய இடத்தை பிடித்துள்ளன.

சிறந்த பூங்காக்களுக்கான போட்டி உட்பட
பல்வேறு போட்டிகள் நடத்தப்பெற்று
அவற்றில் வெற்றி பெறும் வெற்றியாளர்களுக்கு

51 சுழற்கோப்பைகளும் மற்றும் 600 பரிசுகளும்
வழங்கப்பட உள்ளன.

கோப்பைகளையும், பரிசுகளையும் பெறப் போகின்ற வெற்றியாளர்களுக்கு
முன்கூட்டியே
நான் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மலர்க்காட்சியைத் தவிர பேரணி,
இரவு சந்தை, காய்கறி கண்காட்சி,
புகைப்படக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள்,
படகு போட்டி, புத்தக கண்காட்சி,
பழக்காட்சி, தேயிலை மற்றும் சுற்றுலா விழா என
மே மாதம் முழுவதும் சுற்றுலாப் பயணிகளை
மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்த தமிழ்நாடு அரசால்
அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
''மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான்'' என்ற அதே வழியைத்தான்
மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த நாங்களும் பின்பற்றுகிறோம்.
ஆனால் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஓரம் கட்டப்பட்டவர்கள்
இன்று அம்மா அவர்களின் பெயரைக் கூறிக் கொண்டு, 'நாங்கள் சர்வ
வல்லமையும் சக்தியும் படைத்தவர்கள்' என்று கூறி
ஒரு மாயபிம்பத்தை ஏற்படுத்தி வருகிறார்கள்.
அது கானல் நீராக மறைந்துவிடும்
என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.
எது பிம்பம் ? எது உண்மை ? என்று
எல்லோருக்கும் தெரியும்.

இதை கூறுகிறபோது எனக்கு ஒரு கதை
நினைவுக்கு வருகிறது.

மலையிலிருந்து கற்களை உடைத்து
விற்று பிழைப்பு நடத்திவரும் ஒருவன்
பல ஆண்டுகளாக இடைவிடாமல்
எப்போதும் இறைவழிபாடு செய்து வந்தான்.
அதைப்பற்றி யாராவது கேட்டால்,
'மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று தான் இறைவனை வேண்டுகிறேன்'
என்று அவன் கூறுவான். அவனுடைய நண்பர்களும் இதை நம்பினார்கள்.
ஒருநாள் இறைவன் அவனை சோதிக்க நினைத்து திடீரென்று அவன் கண்ணுக்கு
எதிரே காட்சியளித்தார். 'பக்தா! உனக்கு என்ன வேண்டும் கேள்'
என்று இறைவன் கேட்டார்.

பலகாலம் தன் எண்ணத்தில் ஒளிந்து கொண்டிருந்த ஆசையை அவன் அப்போது
வெளிப்படுத்தினான்.

'இறைவா, நான் வல்லவர்களுக்கெல்லாம் வல்லவனாகி, இந்த நாட்டை ஆள
வேண்டும்' என்றான்.
'சரி, எதை வல்லமை என்று நினைக்கிறாயோ,
அதுவாகவே நீ மாறிவிடுவாய்'
என்று கூறிவிட்டு இறைவன் மறைந்துவிட்டார். 'உலகத்தையே சுட்டெரிக்கும்
கதிரவன்தான்
வல்லமை படைத்தது,
நான் அதுவாக வேண்டும்' என்று அவன் நினைத்தான். மறுநொடியில் அவன்
கதிரவனாக மாறினான்.
உலகில் உள்ள எல்லாவற்றையும் தன் கதிரால் அழித்து அதில் இன்பம் கண்டான்.
ஆனால், மேகங்களை கதிரவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கதிரவனின்

கதிர்களைக்கூட

மேகங்கள் திருப்பி அனுப்பின.

‘கதிரவனை விட மேகங்களுக்கு வலிமை அதிகம்’ என்று அவன் நினைத்த

மாத்திரத்திலேயே

அவன் மேகமாக மாறினான்.

அப்போது பலமாக காற்று வீச ஆரம்பித்தது.

அந்தக் காற்று மேகக்கூட்டங்களை

இங்கும் அங்குமாக அலைக்கழித்தது.

‘மேகத்தைவிட இந்தக் காற்றுக்கு வலிமை அதிகம்’

என நினைத்தான்.

அடுத்த நிமிடமே அவன் காற்றாக மாறினான். வேண்டியவர்களுக்கு

தென்றலாகவும், வேண்டாதவர்களுக்கு புயலாகவும்

அவன் மாறிமாறி வீசினான்.

அவன் வீசுவதை மறித்துக் கொண்டிருந்த

ஒரு மலையை ஊடுருவி அவனால் செல்ல முடியவில்லை. ‘இந்தமலைதான்

மிகமிக சக்தி படைத்ததைப் போல் தெரிகிறது’ என்று நினைத்த மாத்திரத்தில்

அவன் மலையாக மாறிவிட்டான்.

அந்த மலையையும் ஒருவன் உளியைக் கொண்டு

உடைத்துக் கொண்டிருந்தான்.

இந்த உலகத்தில் சக்தி வாய்ந்த அனைத்தையும்விட

இந்த மனிதன்தான் வலிமையுடைவனாக

அவனுக்குத் தெரிந்தான்.

உடனடியாக அவன் பழையபடி கல் உடைக்கும் தொழிலாளியாக மாறினான்.

‘நினைப்புதான் பொழப்பைக் கெடுக்கும்’

என்ற உண்மையை அவன் உணர்ந்து

பழையபடி மலைக்குச் சென்று கல் உடைக்க ஆரம்பித்தான்.

இருப்பதை விட்டு பறப்பதற்கு ஆசைப்பட்டால் இருப்பதையும் இழந்துவிடும் நிலைதான் ஏற்படும்.

அதே போலத்தான் மக்களுக்காக உழைப்பதாக கூறிக்கொண்டு ஊரை சுற்றுபவர்கள்,

இறுதியில் கல் உடைக்கும் தொழிலாளியைப் போல்

தனது பழைய நிலைக்கே வருவார்கள் என்பது

இந்தக் கதையின்மூலம் தெளிவாக தெரிகின்றது என்பதை குறிப்பிடுகின்றேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே இருந்தபொழுது, காவல் துறை சிறப்பாக செயல்பட்டு, இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு பேணிக் காக்கப்பட்டது தமிழகத்தில்தான் என்பது இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களது ஆட்சியிலே நாட்டு மக்களுக்கு எப்படி நன்கு காட்டப்பட்டதோ, அதைப் போல அம்மாவினுடைய ஆட்சியிலும் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட்டு இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு பேணிக் காக்கப்படுகின்ற மாநிலங்களில் தமிழகம்தான் முதலிடம் என்ற ஒரு பெருமை அடைகின்ற அளவிற்கு இந்தியாவிலேயே சிறந்த காவல் நிலையமாக கோவை, ஆர்.எஸ்.புரம் காவல் நிலையமும், சிறந்த ஐந்தாவது காவல் நிலையமாக சென்னை, அண்ணா நகர் காவல் நிலையமும் இன்றைக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, சட்டம் ஒழுங்கு பேணிக் காக்கப்படுவதிலே, தமிழகம் சிறந்து விளங்குகின்றது என்பதை இந்த காவல் நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து தெள்ளத்தெளிவாக தெரிகின்றது.

அதேபோல, இன்றைக்கு மத்திய அரசிடமிருந்து கேபிள் டிவி நிறுவனத்திற்கு டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் பெறப்பட்டது. பல்லாண்டு காலமாக நாம் மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்தோம், டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமத்தை பெறுவதற்கு பல ஆண்டுகாலம் பிடித்தது, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவை நனவாக்குவதற்காக இன்றைக்கு மாண்புமிகு

அம்மாவினுடைய அரசு மத்திய அரசிடத்திலே கோரிக்கை வைத்து, அந்த டிஜிட்டல் உரிமத்தையும் பெற்றுத் தந்தது.

அதேபோல, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக தாட்கோ மூலம் சுயதொழில் தொடங்க இன்றைக்கு 237 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல, விவசாயிகள் உரிய நேரத்திலே பயிர் செய்யவதற்காக பயிர்க் கடனாக 9,84,990 விவசாயிகளுக்கு, ரூபாய் 5813.13 கோடி பயிர்கடன் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. விவசாயிகளின் தேவையை பூர்த்தி செய்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு செயல்படுகின்றது. பருவகாலங்களில் விவசாயிகள் உரிய முறையிலே பயிர் செய்ய வேண்டுமென்பதற்காக இந்த கடனுதவியும் அம்மாவினுடைய அரசால் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அம்மாவினுடைய அரசால் ரூபாய் 2247 கோடி வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அதனால், 9 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றார்கள், அவர்களுக்கு இந்தியாவிலேயே அதிகமாக ரூபாய் 3500 கோடி பயிர் காப்பீட்டுத் தொகை பெற்றுத் தந்த அரசு அம்மாவினுடைய அரசு.

மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது, ஏழை, எளிய மக்கள் வைத்த கோரிக்கையினை ஏற்று, அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட, ரூபாய் 840 கோடி செலவில் 40,000 சூரிய மின்சக்தியுடன் கூடிய முதலமைச்சரின் பசுமை வீடுகள் இன்றைக்கு கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டு நிறைவடைததையொட்டி, அரசு சார்பில் தமிழ்நாடு பொன்விழா ஆண்டாக கொண்டாடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாவினுடைய ஆட்சியில் 402 பள்ளிகளை தரம் உயர்த்தி கல்வியில் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். 112 ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகளாகவும்,

இந்த ஓராண்டில் 4 பள்ளிகள், 810 நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகளாகவும், இந்த ஓராண்டில் 19 பள்ளிகள் மற்றும் 402 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களால், 65 அரசு கலைக் கல்லூரிகளும், இந்த ஓராண்டு காலத்தில் 11 அரசு கலைக் கல்லூரிகளுமாக மொத்தம் 76 கல்லூரிகளை நமது அரசு வழங்கியுள்ளது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த மாணாக்கர்கள் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி படிக்கக்கூடிய சூழலை அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தித் தந்திருக்கின்றது. இதன் விளைவாக மாணவர்களின் சேர்க்கை தொடக்கக் கல்வியில் 99.85 சதவிகிதமும், நடுநிலைப் பள்ளிகளில் 99.11 சதவிகிதமும் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விகிதமும், மேல்நிலைப் பள்ளிகளில் 77.64 சதவிகிதமும் உயர்ந்திருக்கின்றது. அகில இந்திய அளவில், தமிழ்நாட்டில் உயர்கல்வி படிப்பவர்கள் எண்ணிக்கை 46.94 சதவிகிதம் உயர்ந்து, இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மருத்துவத் துறை பொறுத்தவரையில், கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு அந்தப் பகுதியிலேயே சிகிச்சை அளிக்கவேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆங்காங்கே ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்கினார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே 212 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கி, எழை, எளிய மக்கள் தங்கள் பகுதியிலேயே சிகிச்சை பெறவேண்டும் என்பதற்காக இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்கினார்கள். அதேபோல, அம்மாவினுடைய அரசும் இன்றையதினம் கிட்டத்தட்ட 42 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அரசாணை வெளியிட்டுள்ளது. அதேபோல, ஆரம்ப சுகாதார நிலையம், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக இன்றைக்க

உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன. அம்மாவினுடைய ஆட்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 4 மருத்துவக் கல்லூரிகளும், அம்மாவினுடைய ஆட்சிக்கு பின்னால் ஓராண்டு காலத்திலே புதுக்கோட்டை, கரூரிலே 2 மருத்துவக் கல்லூரிகளை அம்மாவினுடைய அரசு துவக்கியிருக்கிறது என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோல, மாற்று உறுப்பு அறுவை சிகிச்சை மூலமாக இரண்டு கைகளை இழந்த ஒருவருக்கு இரண்டு கைகளும் பொருத்தப்பட்டிருக்கிறது. திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த ஒரு தொழிலாளி இரண்டு கைகளையும் இழந்திருக்கிறார். அவருக்கு இறந்தவர் உடலிலிருந்து இரண்டு கைகளையும் எடுத்து பொருத்தப்பட்டு இரண்டு மாதம் ஆகிறது, இன்றைக்கு நல்ல நிலையில் இருக்கின்றார். ஆகவே, இன்றைக்கு சரித்திர சாதனை படைத்திருக்கின்றது. இந்தியாவிலேயே, அரசு மருத்துவமனையில் இப்படி இரண்டுகைகளையும் இழந்த ஒருவருக்கு மாற்று உறுப்பு அறுவை சிகிச்சையின் மூலமாக இரண்டு கைகளும் பொருத்தப்பட்ட வரலாறு கிடையாது, நம்முடைய மருத்துவர்கள் சிறந்த முறையிலேயயே மருத்துவ சிகிச்சை செய்து, ஒரு தொழிலாளிக்கு இறந்தவர் உடலிலிருந்து இரண்டு கைகளையும் எடுத்து அவருக்கு பொருத்தப்பட்டு, இன்றைக்கு நலமுடன் இருக்கின்றார். ஆகவே, மருத்துவத் துறையிலே ஒரு சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, இன்றைக்கு, இதய மாற்று அறுவை சிகிச்சை 110 பேருக்கு செய்திருக்கிறோம், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை 318 பேருக்கு செய்திருக்கிறோம், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை 161 பேருக்கு செய்திருக்கிறோம், நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை 102 பேருக்கு செய்திருக்கிறோம். கணையம் 7 பேருக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கின்றன. இதுதவிர, 388 வட்டங்களில் நடமாடும் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் அரசு மருத்துவமனை மற்றும் தமிழகத்திலுள்ள தனியார் மருத்துவமனைகள் இணைந்து

செயல்பட்டு மாற்று உறுப்பு அறுவை சிசிச்சைகள் ஆகும். மேலும் 1056 இறந்த கொடையாளிகளிடமிருந்து 5933 முக்கிய உறுப்புகள் தானமாக பெறப்பட்டு தொடர்ந்து அகில இந்திய அளவில் மூன்றாவது முறையாக தமிழகம் உடல் தானத்தில் முதன்மை மாநிலமாக பரிசை பெற்றுள்ளது. இந்த பெருமை நம்முடைய தமிழகத்திற்கு கிடைத்திருக்கிறது.

அதேபோல, இன்றைக்கு காலியாக உள்ள அரசு பணியிடங்கள் படிப்படியாக நிரப்பப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு தேர்வு வாரியத்தின் மூலமாக அம்மாவுடைய ஆட்சிக் காலத்தில் 55619 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. அம்மாவுடைய அரசு இந்த ஓராண்டில் 9434 பணியிடங்களை நிரப்பப்பட்டு இருக்கின்றன.

காவல்துறை பணியை பொறுத்த வரைக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆட்சி காலத்தில் 102432 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. அம்மாவுடைய அரசு இந்த ஓராண்டிலே 15621 காலிப் பணியிடங்கள் நிரப்பட்டு இருக்கின்றன.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக 72843 ஆசிரியர் பணியிடங்கள் அம்மாவுடைய ஆட்சியிலே நிரப்பப்பட்டன. ஆசிரியரல்லாத பணியிடங்கள் 14711 பணியிடங்கள் மாண்புமிகு அம்மாவுடைய ஆட்சி காலத்திலே நிரப்பப்பட்டன.

இன்றைக்கு அம்மாவுடைய அரசு பொறுப்பேற்ற ஓராண்டு காலத்திலேயே 2357 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள், 59 பட்டதாரி ஆசிரியர்கள், 4352 ஆய்வக உதவியாளர்கள், 187 உதவி பேராசிரியர்கள், என ஓராண்டு காலத்திலே இந்த காலிப் பணியிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டு இருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல, மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக 4468 மருத்துவர்கள் உட்பட 6438 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள் இந்த ஓராண்டு காலத்தில் மட்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி காலத்திலிருந்து இதுவரைக்கும் நம்முடைய மாணாக்கர்கள் சிறந்த முறையிலே கல்வி கற்க வேண்டும் என்பதற்காக மடிக்கணினிகளை கொடுத்த அரசு அம்மாவுடைய அரசு. இந்த ஆறு ஆண்டு காலத்தில் மட்டும் 36 லட்சத்து 25 ஆயிரத்து 74 மடிக்கணினிகள் மாணவ மாணவிகளுக்கு கொடுக்கப்பட்டு அறிவுபூர்வமான கல்வி கொடுத்த அரசு அம்மாவுடைய அரசு. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் விலையில்லா மடிக்கணினிகள் கொடுக்கவில்லை. ஆனால் தமிழகத்திலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நம்முடைய மாணவர்கள் திறமைமிக்க மாணவர்களாக, அறிவுபூர்வமான மாணவர்களாக, விஞ்ஞான பூர்வமான கல்வியை கொடுக்க வேண்டும் என்பதற்காக அம்மாவுடைய அரசு, அம்மாவுடைய ஆட்சி காலம் தொடங்கி இன்றைக்கு வரை 36 லட்சத்து 25 ஆயிரத்து 74 மடிக்கணினிகளை கொடுத்து மாணவர்களுக்கு விஞ்ஞான கல்வி கொடுத்த அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருகிறேன்.

அதுமட்டுமல்ல கால்நடை மருத்துவத்துறை மூலமாக இன்றைக்கு 810 கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. இன்றைக்கு வாய்பேசுகின்ற மக்களுக்கு சுகாதார வசதியை செய்து கொடுக்கின்ற அம்மாவுடைய அரசு வாய்பேசாத இருக்கின்ற ஜீவன்களுக்கும் அம்மாவுடைய அரசு உரிய சிகிச்சை அளிக்கின்ற விதத்திலே 810 கால்நடை கிளை நிலையங்களை அம்மாவுடைய அரசு திறந்திருக்கின்றன. 20 புதிய கால்நடை மருத்துவமனைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன.

110 கால்நடை கிளை நிலையங்கள் புதிதாக துவக்கப்பட்டு உள்ளன. இப்படி கிளை நிலையங்கள் துவக்கப்பட்டதன் காரணத்தினால் வேளாண் பெருங்குடி மக்கள் தாங்கள் வளர்க்கின்ற கால்நடைகளுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டால், இந்த மருத்துவமனைகளுக்கு கால்நடைகளை அவர்கள் கொண்டு போய் சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிய அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, திருமண உதவி திட்டத்தின் மூலம், 25,000 ரூபாய், 50,000 ரூபாய் மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கப்படுகிறது. பயனாளிகளுக்கு ஆண்டு வருமான வரம்பை 72000 ஆக உயர்த்திய அரசு அம்மாவுடைய அரசு. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் 6000 ரூபாயிலிருந்து 12000 ரூபாயாக மாண்புமிகு அம்மா அவர்கள் 2011ஆம் உயர்த்தினார்கள். மாநில நலன் பேணும் மாண்புமிகு அம்மாவின் அரசும், இந்த நிதியை 12000 ரூபாயிலிருந்து 18000 ரூபாயாக உயர்த்தினோம். இதில் 4000 ரூபாய் மதிப்பில் 12வது வாரம் ஒரு முறையும், 16வது வாரம் ஒருமுறையும், என இரண்டு முறை அம்மா தாய்சேய் நல ஊட்டசத்து பெட்டகம் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, இந்த தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படுவதன் விளைவாக அந்த சத்தான பொருளை கொடுப்பதன் மூலமாக அந்த கர்ப்பிணி பெண்கள் உண்ணுகின்ற போது அந்த குழந்தையுடைய எடை அதிகரித்து ஒரு நல்ல எடையுள்ள குழந்தையாக பிறப்பதற்கு அம்மாவுடைய அரசு தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகத்தை புதிதாக அறிமுகப்படுத்தி வழங்க உள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். இந்த திட்டத்தினால் தமிழ்நாடு முழுவதும் 46 லட்சத்து 61 ஆயிரம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 4326 கோடியே 93 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட உள்ளது.

அம்மா மகப்பேறு சஞ்சீவி கிட் என்பது கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்குகின்ற திட்டம், பிறந்த குழந்தைகளுக்கு 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், எந்த அரசு வழங்குகிறது ? இந்தியாவிலேயே ஏழை, எளிய தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகள் கூட சுகாதாரமாக இருக்க வேண்டும் என்பதற்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசு பெட்டகத்தைத் தந்து அந்த குழந்தை சிறப்பாக ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, வழங்கிக் கொண்டிருக்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு. கர்ப்பிணித் தாய்மார்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்காக இலவச 108 ஆம்புலன்ஸ் வாகனமும் இன்றைக்கு பயன்படுத்தப்படுகிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016 சட்டமன்றத் தேர்தலிலே கழகத்தின் சார்பாக தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்கள், நான் முதலமைச்சராக வந்தவுடன் உழைக்கும் மகளிர்க்கு மானிய விலையிலே அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க, அம்மாவினுடைய அரசு இன்று அதை செயல்படுத்தியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை 3 லட்சத்து 34 ஆயிரம் பேர் இதிலே பதிவு செய்திருக்கின்றார்கள், அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 1 லட்சம் பேருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும். அதற்காக, ஒவ்வொரு ஸ்கூட்டருக்கும் அதிகபட்சமாக 25000 ரூபாய் மானியமாக வழங்கப்படும். இந்தியாவிலேயே எங்கும் இந்தத் திட்டம் இல்லை. இன்றைக்கு வேலைக்கு செல்கின்றவர்கள், உழைக்கின்றவர்கள் உரிய நேரத்தில் வேலைக்கு செல்வதற்கும், பணி முடிந்தவுடன் வீட்டிற்கு செல்வதற்கு அம்மா இருசக்கர வாகனம் மிக பயனுள்ளதாக இருக்கும். இப்படி

ஏராளமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது, நீலகிரி மாவட்ட மக்களின் மீது மிகுந்த அன்பு கொண்டவர்கள். இந்த மாவட்ட மக்கள் அளிக்கின்ற அத்தனை கோரிக்கைகளையும் நிறைவேற்றி மக்களிடத்திலே தனி இடத்தை பெற்றவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இங்குள்ள மக்கள் மீது எப்படி அன்பு செலுத்தினார்களோ, அதே அளவிற்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசும், இந்த மக்கள் மீது அன்பு கொண்டிருக்கின்றது என்ற அடிப்படையிலே, இங்கே இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகளும், பொதுமக்களும் வைத்த கோரிக்கைகளையெல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றும் என்பதை சுட்டிக்காட்டி, சில திட்டங்களை இங்கே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வைத்த கோரிக்கைகளெல்லாம் அம்மாவினுடைய அரசால் பரிசீலிக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்து அந்தக் கோரிக்கைகளையெல்லாம் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாலங்களெல்லாம் தொட்டபெட்டா, கக்குச்சி, எப்பநாடு, உள்ளத்தி ஆகிய ஊராட்சிகள், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள உபதலை, திட்டப்பள்ளி ஆகிய 2 ஊராட்சிகள், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தேனாடு, கோணவக்கரை, குஞ்சப்பணை, நெடுகுளம் ஆகிய 4 ஊராட்சிகள், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சேரங்காடு, மசனக்குடி, நிலாக்கோட்டை ஆகிய 3 ஊராட்சிகள் என மொத்தம் 15 கிராம ஊராட்சிகளுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும்பொருட்டு, குப்பைகளை சேகரிப்பதற்காக

மோட்டார் பொருத்தப்பட்ட 15 pickup வாகனம் வழங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, உதகை நகராட்சிக்குட்பட்ட முக்கிய 28 சாலைகளுக்கு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தேவர் சாலை பேரூராட்சியில் பேருந்து நிறுத்தம் மற்றும் வணிகவளாகங்கள் கட்டப்படுவதற்கு அரசு பரிசீலிக்கும்.

கூடலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வசனக்குடி, முதுமலை, ஸ்ரீமதுரை, நிலாக்கோட்டை மற்றும் சேரங்கோடு ஆகிய 5 கிராம ஊராட்சிகள், குடிசைகளில் வாழும் 125 பழங்குடியினருக்கு முதலமைச்சரின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 125 வீடுகளும், கூடலூர் நகராட்சி மற்றும் ஓவேலி பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் 165 வீடுகளும் கட்டித் தரப்படும். இப்பகுதி மலைப்பகுதியாக உள்ளதால், கூடுதல் மதிப்புடன் பணிகள் மேற்கொள்ளப்படும். அந்தப் பணிகளும், அவர்கள் கொடுத்த அந்த கோரிக்கையையும் அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

உதகை மசனக்குடி, சுக்கநல்லார் சாலையில் தெப்பக்காடு பகுதியில் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பாலம் மிக குறுகியதாக உள்ளதாகவும், இந்தப் பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்டப்படவேண்டும் என்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள், அதையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள குடிநீர் வினியோகம் செய்யும் அனைத்து குழாய்களும் மாற்றியமைக்கப்படும் பணியும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடலூர் நகராட்சிக்குப்பட்ட பகுதியில் குடிநீர் வினியோகம் சீர்செய்ய அனைத்து குடிநீர் வினியோகம் செய்யும் குழாய்கள் மாற்றியமைக்கப்படும்.

உதகமண்டலம் தோட்டக்கலைத் துறையின் மூலம் தாவரவியல் பூங்கா, அரசு ரோஜா பூங்காவில் பணியாற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு வழங்கப்படும் தினக்கூலி 250 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் உருவாக்கித் தந்த அரசு இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு, நீண்ட, நெடிய காலமாக காவிரி பிரச்சினை, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இருக்கின்றபொழுது, 1986ஆம் ஆண்டே அப்பொழுதே மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார். இந்தக் காவிரி நதிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு உடனடியாக நடுவர் மன்றத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார். அதற்குப் பிறகு மத்திய அரசால் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. எனவே, நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு, 2007ல் இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பு 2013ல் அரசிதழில் வெளியிடப்பட்டது, சட்டப் போராட்டத்தின் மூலமாக. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே இதற்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே, உச்சநீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்து, தமிழகத்திற்கு தேவையான நீரைப் பெறுவதற்கு, நம்முடைய உரிமை நிலைநாட்டுவதற்கு, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்தை அணுகினார்கள். இன்றைக்கு உச்சநீதிமன்றம் தீர்ப்பை வழங்கியிருக்கிறது. இன்றையதினம், இறுதித் தீர்ப்பை வழங்குவதாக நேற்று அறிவித்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 32 ஆண்டு காலம், தமிழ்நாட்டில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களும், பொது மக்களும், பல்வேறு அரசியல் கட்சிகளும், அனைத்திந்திய அண்ணா

திராவிட முன்னேற்றக் கழகமும் பிரதானமாக இதற்காக போராடி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த காவிரி நதிநீருக்காக 4 நாட்கள் உண்ணாவிரதம் இருந்த தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அப்படி பல்வேறு போராட்டங்களின் மூலமாக 32 ஆண்டுகாலமாக தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினை இன்றைக்கு தீர்வு காணக்கூடிய ஒரு சூழ்நிலையை, இன்று நாம் இறுதி வடிவத்தை, இறுதி கட்டத்தை அடைந்திருக்கின்றோம். ஆகவே, இன்றைய தினம் நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எதை, எதை நினைத்தார்களோ, அதையெல்லாம் உச்சநீதிமன்றம், பெரும்பாலானவை ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு தீர்ப்பு அளிக்கப்படுகின்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இன்றைக்கு நமக்குக் கிடைக்கவேண்டிய நீரினுடைய அளவு குறையாமல் கிடைப்பதற்கு பாதுகாப்பான வாரியத்தை அமைக்கப்பட வேண்டுமென்று இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். அந்த வழக்கின் அடிப்படையிலே, இன்றைக்கு வாரியம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்குக் கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அம்மாவினுடைய அரசு, இன்றைக்கு அம்மா என்ன நினைத்தார்களோ அதை இன்றைக்கு நடைமுறைப்படுத்துகின்ற அரசாக இன்றைக்கு திகழ்ந்து கொண்டிருக்கின்றது. சட்டப்போராட்டத்தின் மூலமாக இன்றைக்கு, நீதியை நிலைநாட்டக்கூடிய சூழ்நிலை வந்திருக்கின்றது. நிச்சயமாக நல்ல தீர்ப்பு இன்றைக்கு கிடைக்க இருக்கின்றது. ஏற்கனவே, நடுவர் மன்ற ஆணையம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில்தான் இந்த தீர்ப்பு வழங்கப்படுமென்ற ஒரு செய்தியை உச்சநீதிமன்றம் தெரிவித்திருக்கின்றது. அதன் அடிப்படையிலே, இன்றைய தினம், 2 மணி அளவிலே தீர்ப்பு வழங்குவதாக அறிவித்திருந்தார்கள். இன்றைக்கு தீர்ப்பு வழங்காவிட்டால் 22ம் தேதி இறுதி தீர்ப்பு வழங்கப்படும் என்றும் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். நம்முடைய எண்ணங்களும், நம்முடைய

கோரிக்கைகள் எல்லாம் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றவரை என்ன நினைத்தார்களோ அதை நிறைவேற்றுவதுதான் நம்முடைய இலட்சியம். அவர்கள் இலட்சியப்படி, காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும் நடுவர்மன்ற ஆணைய தீர்ப்பின்படி அமைக்க வேண்டுமென்று நாம் வாதாடினோம். அந்த வாதாடியதற்கு இறுதி வடிவம் கிடைக்க இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்ன நினைத்தார்களோ, அதை அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இது சாதாரண விஷயமல்ல. இன்றைக்கு தமிழகத்தினுடைய ஜீவநதியாக இருப்பது காவிரி நதிநீர். ஆகவே, அந்த நதியில் கிடைக்கின்ற நீரைப் பயன்படுத்திதான் நம்முடைய விவசாயிகள் இன்றைக்கு விவசாயம் செய்யக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றோம். அண்டை மாநிலங்களில் உற்பத்தியாகின்ற நதிநீர் நம்முடைய மாநிலத்திற்கு வருகின்றது. அங்கே வருகின்றபொழுதுதான் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றது. ஆகவே, 32 ஆண்டுகாலம் காவிரி நதிநீர் பிரச்சினைக்கு இன்றையதினம், இன்றைக்கு தீர்வு காணப்படவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, நல்ல தீர்ப்பு நமக்குக் கிடைக்கும், நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களும், பொதுமக்களும் நினைத்த தீர்ப்பு நிச்சயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றோம், நம்புகின்றோம். ஆகவே, உச்சநீதிமன்றம் நல்ல தீர்ப்பை வழங்கும். தமிழக மக்களும், தமிழக விவசாயப் பெருங்குடி மக்களும் எண்ணியதை அம்மாவினுடைய அரசு நிறைவேற்ற பாடுபடும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச்சிறப்பாக, எழுச்சியாக இந்த 122வது மலர்க்கண்காட்சி நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த வேளாண் பெருமக்களுக்கும், வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும்,

அவரோடு இணைந்து பணியாற்றிய அத்தனை அரசு அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

******